| Spl S.CNo. | **17/2022 (CC No.3/2018)** | Deposition of | **PW. 75** (LW. 308) |
|---|---|---|---|
| Name | Tr. A.Sivakumar | Date | 12.06.2026 |

**1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.**

**1ம் எதிரிக்கான குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் 11.35 A.M.**

என்ஐஏவால் இந்த வழக்கில் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன்பு துடியலூர் காவல் நிலையம், CBCID SID மற்றும் என்ஐஏ விசாரணையின் போது நான் மேற்சொன்ன மூன்று விசாரணைகளிலும் இந்த வழக்கில் அயல் பணியில் விசாரணைக்கு உதவியாக இருந்தேன் என்றால் துடியலூர் காவல் நிலைய விசாரணைக்கு உதவியாக இல்லை, CBCID SID மற்றும் என்ஐஏ விசாரணையின் போது நான் விசாரணைக்கு உதவியாக இருந்தேன். சா்க்கரை விநாயகா் கோவிலிலிருந்து மேற்காக செல்லும்போது தடாகம் வழியாக கோவை செல்ல முடியும் என்றால் அந்த வழி எனக்கு சரியாக தெரியாது. சா்க்கரை விநாயகா் கோவிலிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும்போது கொங்குநாடு கல்லூரி வழியாக வெள்ளகிணறு துடியலூா் செல்ல இயலும் என்றால் சரிதான். CBCID முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபோது அது CBCID-South PS என்று பதியப்பட்டதாக இருக்கிறது என்றால் சரிதான். CBCID-South PS கோயம்புத்தூா் உப்பிளிப்பாளையத்தில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. CBCID SID அலுவலகம் கோவை PRS மைதான வளாகத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

உப்பிளிப்பாளையத்தில் இருந்து PRS மைதானம் சுமார் 3 கிமீ தொலைவில் உள்ளது என்றால் சுமார் 1.5 லிருந்து 2 கிமீ தூரம் இருக்கும். CBCID-South PS ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை CBCID SID அலுவலகத்திற்கு 02.10.2016 அன்றுதான் அனுப்பப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 02.10.2016 அன்று CBCID SID அலுவலகத்தில் பெறப்பட்ட முதல் தகவல் அறிக்கை மறுநாள் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 22.09.2016 அன்று நான் சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். சிங்காநல்லூர் காவல் நிலையம் கோவை மாநகர எல்லைக்கு உட்பட்டது என்றால் சரிதான். எங்கள் உயர் அதிகாரி கோவை மாநகர காவல் ஆணையர் என்றால் சரிதான். கொலை நடந்ததாக சொல்லப்படும் சர்க்கரை விநாயகர் கோவில் பகுதி துடியலூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டது என்றால் சரிதான். 22.09.2016 காலகட்டத்தில் துடியலூர் காவல் நிலையம் கோவை மாவட்ட rural பகுதிக்கு உட்பட்டது என்றால் சரிதான். கோவை மாவட்ட rural பகுதிக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தான் உயர் அதிகாரி என்றால் சரிதான். நான் உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் அயல் பணியில் இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, DGP or ADGP உத்தரவு உள்ளது. DGP or ADGP உத்தரவு உள்ளது என்று தற்போதுதான் நீதிமன்றத்தில் முதன்முறையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அது சம்மந்தமான ஆவணங்கள் எதனையும் குற்றப்பத்திரிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல, உயர் அதிகாரியின் உத்தரவு உள்ளதாக ஏற்கனவே சொல்லியுள்ளேன், DGP or ADGP உத்தரவு பிறப்பித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை. சர்க்கரை விநாயகர் கோவிலிலிருந்து கிழக்காக சென்று வலது பக்கம் சென்றால் கவுண்டர் மில் மற்றும் கவுண்டம்பாளையம் வழியாகத்தான் கோவைக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். 1998ல் இருந்தே கவுண்டம்பாளையத்தில் ஆயுதம் தாங்கிய போலிசார் outpost ல் 24 மணி நேரமும் இருப்பார்கள் என்றால் சரியல்ல, அது border checkpost, 24 மணி நேரமும் ஆட்கள் இருப்பார்கள் என்று உறுதியாக சொல்லமுடியாது. border checkpost ல் அந்த வழியாக வரும் அனைத்து வாகனங்களையும் வாகன பரிசோதனை செய்த பிறகுதான் செல்ல அனுமதிப்பார்கள் என்றால் சரியல்ல, random check தான் செய்வார்கள். random check தான் நடக்கும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அனைத்து வாகனங்களையும் சோதிப்பார்கள் என்று சொன்னால் இந்த வழக்கிற்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 06.08.2021 குற்றப்பத்திரிக்கை நான் தாக்கல் செய்தபோது 07.04.2018 மற்றும் 21.06.2018 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கைகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து அதன் உள்ளடக்கங்களை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். சித்தாபுதூர் பாஜக அலுவலகத்திலிருந்து ரத்தினபுரி சுமார் 5 கிமீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். ரத்தினபுரியிலிருந்து சுப்பிரமணிபாளையம் சுமார் 8 கிமீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். அ.த.சா ஆ364 குற்றப்பத்திரிக்கை

தாக்கல் செய்தபோது பரிசீலனை செய்தேனா என்றால் பரிசீலனை செய்யவில்லை. ஏற்கனவே நீதிமன்றத்தில் அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்ததாக சொல்லிவிட்டு தற்போது பரிசீலனை செய்யவில்லை என்று சொல்கிறேன் எனவே நான் ஆவணங்களை பரிசீலனை செய்தேனா இல்லையா என்றால் 5ம் எதிரி சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் நான் பரிசீலனை செய்தேன் ஏனென்றால் நான் 5ம் எதிரிக்கு மட்டுமே குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். நான் முதல் விசாரணையில் 9 சாட்சிகளை விசாரணை செய்ததாக சொல்லியுள்ளேன், நான் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலத்தை மட்டும் தாக்கல் செய்துள்ளேனா அல்லது 308 சாட்சிகளின் வாக்குமூலங்களையும் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கையுடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மேற்படி 9 சாட்சிகளின் மறுவாக்குமூலம்தான் நான் தாக்கல் செய்துள்ளேன், எனக்கு முன்பு விசாரித்த அதிகாரிகள் பதிவு செய்த வாக்குமூல நகல்களை நான் குற்றப்பத்திரிக்கையுடன் இணைத்துள்ளேன். எனக்கு முன்பு விசாரணை செய்த அதிகாரிகள் பதிவு செய்த வாக்குமூலங்களையும் மற்றும் ஆவணங்களையும் நான் பார்வையிடவில்லை என்றால் சரியல்ல, பார்வையிட்டேன். அவ்வாறு பார்வையிட்டதில் அ.த.சா ஆ364 அடங்குமா என்றால் அடங்கும். அ.த.சா ஆ364ல் இறந்துபோன சசிக்குமார் ரத்தினபுரி சாஸ்திரி வீதியில் குடியிருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அனைத்து காவல் கண்காணிப்பாளர்கள் ஈரோடு மாவட்டத்திற்கு காவல் கண்காணிப்பாளர், ஈரோடு மாவட்டம் அவர்கள் அனுப்பிய சுற்றறிக்கையில் அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அ.த.சா ஆ364ல் மேற்சொன்ன சுற்றறிக்கையில் 23.09.2016

தமிழகம் முழுவதும் பந்த் நடத்தவேண்டும் என்று காடேஸ்வரா சுப்பிரமணியம் பேட்டி அளித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காடேஸ்வரா சுப்பிரமணியம் அளித்த பேட்டியில் தமிழகம் குஜராத் ஆக மாறும் என்று மிரட்டல் பேட்டி அளித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. துடியலூர் காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை, CBCID - South முதல் தகவல் அறிக்கை, மற்றும் என்ஐஏ முதல் தகவல் அறிக்கை அனைத்திலும் இறந்துபோன சசிக்குமார் சுப்பிரமணியம்பாளையம் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோன சசிக்குமார் சுப்பிரமணியம்பாளையம் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்ததற்காக நான் எந்த ஆவணத்தையும் கைப்பற்றவில்லை என்றாலும் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. இறந்துபோன சசிக்குமார் சுப்பிரமணியம்பாளையம் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்ததற்காக எந்த ஆவணத்தை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்று சொல்லமுடியும் என்றால் அவர் வாடகை வீட்டில் வசித்ததற்கான ஒப்பந்தம் எதுவும் இல்லை அதனால் ஆவணங்களை நான் கைப்பற்றவில்லை, ஆனால் சாட்சிகளை விசாரித்து மற்றும் அவர்களது வாக்குமூலத்திலிருந்து தெரிந்துக்கொண்டேன். இறந்துபோன சசிக்குமார் வசித்து வந்து வீட்டின் உரிமையாளர் பெயர் என்ன என்றால் கோப்புக்களை பார்த்துதான் சொல்லமுடியும். இறந்துபோன சசிக்குமார் வசித்து வந்து வீட்டின் உரிமையாளர் பெயர் தெரியாது என்பதால்தான் கோப்புக்களை பார்த்துதான் சொல்லமுடியும் என்று பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. 23.09.2016ல் இருந்து நடைபெற்ற சட்டவிரோத செயல்கள் அனைத்தும் இந்து முன்னனி நடத்திய பந்த்தின் தொடர்ச்சி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு கோப்புக்களை பார்வையிட்டதிலிருந்து இறந்துபோன சசிக்குமாருடன் கடைசியாக கைபேசியில் யார் பேசினார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் CDR மூலமாக Call details தெரிந்துகொண்டேன், ஆனால் சசிக்குமார்தான் பேசினாரா என்று என்னால் அறுதியிட்டு சொல்ல முடியாது. CDR மூலமாக அறிந்துகொண்ட நபர்களை விசாரிக்க நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. யாரை விசாரித்தீர்கள் என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல, என்னால் சொல்லமுடியும். CDR ன்படி தனபால், சுதாகர், பாஜக அலுவலக நிர்வாகிகள் ஒருசிலரையும் மேலும் சிலரையும் விசாரித்துள்ளேன். CBCID SIDன் விசாரணையின்போது கோவை போத்தனூர் மேட்டூரை சேர்ந்த இந்து முன்னனியின் குறிச்சி நகர செயலாளர் ஆனந்த் என்பவரை இறந்துபோன சசிக்குமாருடனான முன் விரோதம் தொடர்பாக விசாரித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனந்த் விசாரணை தொடர்பாக இந்து முன்னனியின் மாநில தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் CBCID SIDன் உயர் அதிகாரிகள் மற்றும் கோவை மாநகர காவல் அதிகாரிகளையும் சந்தித்து விசாரணை இந்து முன்னனி பக்கம் திரும்புகிறது என்று புகார் அளித்த விவரம் தெரிந்துகொண்டேன் என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 20.02.2018 அன்று CBCID SIDன் துணை காவல்

கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்துபோன சசிக்குமாருக்கு வேறு ஏதேனும் முன்விரோதம் உள்ளதா என்பது பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும் அந்த அறிக்கையில் ஆனந்த் பற்றி குறிப்பு உள்ளதால் தான் அந்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 1ம் எதிரி சையது அபுதாகிர் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டதாக அவரது தந்தை கோவை மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவரிடம் மனு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கோவை மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் நீதித்துறை நடுவர் எண் 3, கோவை அவர்களை மனுவில் கண்ட இடமான CBCID SID அலுவலகத்தை சோதனை செய்து சையது அபுதாகிர் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டிருந்தால் அவரை ஆஜர் படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் உண்மையிலேயே அயல் பணியில் இல்லாததால் தான் இந்த விவரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. பாதுகாக்ப்பட்ட சாட்சிகளாக காட்டப்பட்டுள்ள அ.த.சா 62 முதல் 65 சாட்சிகளை வைத்து வழக்கை ஜோடிப்பதுதான் எனக்கு கொடுக்கப்பட்ட முதன்மையான முக்கிய பணி என்றால் சரியல்ல. எதிரி அபுதாகிரின் அடையாள அணிவகுப்பு அவரது கைதுக்கு பிறகு 13.04.2017ல் கோவை மத்திய சிறையில் நடைபெற்ற விவரத்தை ஆவணத்தின் வாயிலாக தெரிந்துகொண்டேனா என்றால் அயல் பணியில் CBCID SID விசாரணை

அதிகாரி உத்தரவிடும் பணிகளை மட்டும்தான் செய்து வந்ததால் நான் அடையாள அணிவகுப்பு பற்றி தெரிந்துகொள்ளவில்லை. அ.த.சா ஆ186, 281, 108 ஆகிய மூன்று மாதிரி வரைபடங்களிலும் சர்க்கரை விநாயகர் கோவிலுக்கு எதிரே மருந்துக்கடை உள்ளதாக காட்டப்படவில்லை என்றால் சரியல்ல, அ.த.சா ஆ108ல் அன்னை மெடிக்கல் ஷாப், சித்தா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.த.சா ஆ270லிருந்து தான் அ.த.சா ஆ316ல் உள்ள transcript எடுக்கப்பட்டதா என்றால் சரிதான். 13.07.2021 அன்று அ.த.சா 5 தனபால் அவர்களை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். என்னுடைய விசாரணையின்போது அ.த.சா 5 தனபால் அவர்களிடமிருந்து 13.07.2021ல் அ.த.சா ஆ270 தரவுகளை பெற்றதாக வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.த.சா ஆ270 14.06.2021 அன்று தயார் செய்யப்பட்டதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 13.07.2021ல் சாட்சி தனபால் தாக்கல் செய்ததாக சொல்லவிட்டு முதல் விசாரணையில் 14.06.2021 அன்று பாலசுப்பிரமணியன் தாக்கல் செய்ததாக முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாட்சி பாலசந்ரு என்பவர் முன்னிலையில் தனபால் ஒப்படைத்ததை நான் தவறாக பாலசுப்பிரமணியன் என்று சொல்லிவிட்டேன். முதல் எதிரியை சட்டவிரோதமாக கைது செய்துவிட்டு அதை நியாயப்படுத்தும் வகையில் மற்ற எதிரிகளையும் நிர்ணயம் செய்து அதற்கு தகுந்தார்போல் வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**1ம் எதிரிக்கான குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்ட நேரம் 1.30 P.M.**

**ஒத்திவைக்கப்பட்ட 1ம் எதிரிக்கான குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் 3.35 P.M.**

அ.த.சா ஆ318ல் உள்ள தரவுகளில் உள்ள முதல் file excel sheet formatல் உள்ளது என்றால் சரிதான். excel sheet formatஐ edit செய்ய முடியும் என்றால் முடியும். அ.த.சா ஆ318ல் உள்ள தரவுகளில் உள்ள முதல் file excel sheet இவ்வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, அதன் பிரிண்ட் அவுட் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது. அ.த.சா ஆ318ல் உள்ள தரவுகளில் உள்ள முதல் file excel sheet ல் உள்ள தரவுகள் போலவே அ.த.சா ஆ27, 29, 31, 130, 132, 136, 204, 394 ஆகியவை வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அதன் பிரிண்ட் அவுட் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது. அ.த.சா ஆ67 பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்வதற்காக ஒரு தினம் முன்பு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.த.சா ஆ282 ல் உள்ள என்னுடைய கையெழுத்தும் அதன் கீழ் இடப்பட்ட தேதியும் வேறு வேறு பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.த.சா ஆ282 ல் நடராஜன் என்பவரின் கையெழுத்திற்கு அருகே தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.த.சா ஆ319 நான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதற்கு ஒரு நாள் முன்பு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். குற்றப்பத்திரிக்கையில் 17.5 பத்தியில் TN38 AF 0994 and TN45 AJ 0302 ஆகிய இரு வாகனங்கள் பற்றிய குறிப்பு உள்ளது என்றால் சரிதான். 06.08.2021 அன்று குற்றப்பத்திரிக்கையுடன் என்னிடம்

காட்டப்படும் ஆவணம் (ஆவண எண். 210) தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தாக்கல் செய்யபப்பட்டது. அந்த ஆவணம் **எ.த.சா ஆ32 (2 தாள்கள்)** ஆகும், அது என்ஐஏ 3ம் எதிரிக்கு பிரிவு 43F UA(P)A வின் படி TN38 AF 0994 வாகனத்தைப்பற்றி தகவல் கேட்டு அதற்கான பதில் பெறப்பட்ட ஆவணம் ஆகும். 0994 என்ற எண் கொண்ட வரிசையில் எத்தனை வாகனங்கள் பதிவாகி இருந்தது என்று RTO விடம் தகவல் கேட்டு தரவுகளை பெற நான் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். அ.த.சா ஆ121 TN45 AJ 0302 என்ற வாகனத்தின் Proceedings of production cum seizure/ Inspection of Honda Unicorn motorcycle என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் இறுதியில் "No positive result regarding traces of human blood has been found" என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். TN38 AF 0994 and TN45 AJ 0302 வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. அ.த.சா ஆ101ல் 03.06.2018 அன்று நடைபெற்றதாக சொல்லப்பட்ட நிகழ்விற்கு 02.07.2021 அன்று மூன்று ஆண்டுகள் ஒரு மாதம் கழித்து 65பி சான்றிதழ் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.த.சா ஆ108ல் நந்தினி பேக்கரி என்ற ஒரு கடை இல்லை என்றால் குறிப்பிடப்படவில்லை. அ.த.சா ஆ9, 67, 282, 284 ஆகியவை நான் அயல் பணியில் இருந்தபோது என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் அ.த.சா ஆ67ஐ தவிர மற்றவை என்னால் தயார் செய்யப்பட்டது. அயல் பணியில் இருக்கும்போது வேறு ஒரு அலுவலகத்தில் இருக்கும் கணினியை என்னால் பயன்படுத்த இயலாது

என்றால் சரியல்ல. அ.த.சா ஆ3 பத்தி 4ல் 29.07.2021 அன்று மத்திய அரசிற்கு ஒப்புதல் வேண்டி வேண்டுகோள் ஆவணங்களுடன் அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா ஆ319 ஆனது அ.த.சா ஆ318ற்காக தயாரிக்கப்பட்ட 65பி சான்றிதழ் என்றால் சரிதான். அ.த.சா ஆ318 மற்றும் 319 05.08.2021 அன்று மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெறுவதற்காக ஆவணங்களை அனுப்பியதற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் ஏற்கனவே பல்வேறு காலக்கட்டங்களில் புலன் விசாரணையின்போது பெறப்பட்ட CDR களை ஒரே சிடியில் பதிவு செய்ததுதான் அ.த.சா ஆ318 ஆகும். 04.08.2021 அன்று ஒப்புதல் பெறப்பட்டதற்கு பின்னிட்டு ஆவணங்கள் ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும் பல்வேறு காலக்கட்டங்களில் புலன் விசாரணையின்போது பெறப்பட்ட CDR களை ஒரே சிடியில் பதிவு செய்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புலன் விசாரணை செய்து எதிரிகளை நிர்ணயிக்காமல் எதிரிகளை நிர்ணயித்துவிட்டு புலன் விசாரணையை மேற்கொண்டு தவறாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளும் சான்று ஆவணங்களும் சான்று பொருள்களும் கற்பனையாக உருவாக்கப்பட்டு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**1ம் எதிரிக்கான குறுக்கு விசாரணை முடிவடைந்த நேரம் 4.30 P.M.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

SUBRAMANIAN MALARVIZHI

Digitally signed by SUBRAMANIAN MALARVIZHI
Date: 2026.06.12 16:46:20 +0530

District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.